# கூட்டணி குழுவினர் ஜனதிபதியை சந்திப்பர்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 10-7-86 வியாழன் ஆனி 20 ... 2 முழக்கம் 56

## ஈழமுரசு செய்தி ஊர்ஜிதம்

(சென்னை)

ஜனதிபதி ஜெயவர்த்தனவைச் சந்திப்பதற்கு கூட்டணிக் குழுவொன்றை கொழும்புக்கு அனுப்புவதென்று நேற்று சென்னையில் கூடிய கூட்டணியின் அரசியல் குழு முடிவெடுத்தது. ஆனல் இக் குழு 15ம் திகதி நடைபெறும் அரசியல் குழுக்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளாது. ஈழமுரசு நேற்றுமுன் தினம் பிரத்தியேகமாக வெளியிட்ட இச்செய்தியை கூட்டணி அரசியல் குழு நேற்று ஊர்ஜிதம் செய்தது திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோர் கொழும்புக்கு வருவார்கள். அநேகமாக 14ம் திகதி திங்கட்கிழமை இவர்கள் ஜனதிபதியை சந்திக்கலாமெனத் தெரிகின்றது. "புதிய யோசனைகள் தொடர்பாக இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தன இந்திய அரசுக்கு அனுப்பிய யோசனைகள் உண்மையானவை" என்று தெரிவிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்வதெனவும் கூட்டணி அரசியல் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# திருமலை குரங்குப் பாலத்தில் பதினறு சிங்களவர் சுட்டு கொலை

## மூன்று மீன்லொறிகளும் எரிக்கப்பட்டன

(திருமலை)

திருமலையில் நேற்று முன்தினமிரவு இனம் தெரியாத கோஷ்டியொன்றினல் மூன்று மீன் லொறிகளில் சென்றவர்களின்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினல் மொத்தம் பதினறு பேர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மரணமானவர்களில் ஒருவர் பெண். இருவர் சிறுவர்கள். ராணுவச் சிப்பாய் ஒருவர். மிகுதி பன்னிரண்டு பேரும் ஆண்கள்.

இச் சம்பவம் திருமலை கந்தளாய் வீதியில் குரங்குப் பாலம் என்ற இடத்தில் இடம்பெற்றதாகவும், பதினறு சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட மூன்று மீன் லொறிகளும் கொழும்புக்குச் செல்லவிருந்தன. இதில் லீவில் கொழும்பு செல்ல வேண்டிய ராணுவச் சிப்பாய் ஒருவரும் பயணம் செய்து கொண்டிருந்தார்.

ஏழாம் கட்டையடி குரங்குப் பாலத்தில் லொறிகள் ஒன்றன் பின் ஒன்ருக வந்தபோது இனம்தெரியாத கோஷ்டியொன்று ஆயுதங்கள் சகிதம் வழியை மறித்து லொறிகளை விலாங்குளம் பகுதிக்குக் கொண்டு சென்றது. இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், மூன்று லொறிகளும் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரணமான அனைவரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிந்திய செய்தி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பீடத்திலுள்ள ஏழுஉறுப்பினர்களைக்கொண்ட குழு ஜனதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கொழும்பு வரவுள்ளதாக திரு. அமிர்தலிங்கம் 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத்திடம் நேற்றுத் தெரிவித்தார்.

### திருமலையில் ஊர்காவலர் அட்டகாசம்

## இருபது வரையான தமிழர்கள் சுட்டும் வெட்டியும் படுகொலை

திருமலையில் நேற்று ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் மரணமான தமிழர்களின் தொகை பதினைந்தைத் தாண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரைக் காவல் புரிபவர்கள் தமிழர்களைத் தேடிப் பிடித்து வந்து வீதிகளில் நிறுத்தி வைத்துச் சுட்டும், வெட்டியும் துடிக்கத் துடிக்கக் கொலை செய்தனராம்.

அதேவேளையில் பல தமிழர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

மரணமான தமிழர்களின் தொகை இருபதைத் தாண்டியிருக்கலாமென்று பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

### வீட்டுக்கு வெளியே இழுத்து சுடப்பட்ட

## தமிழ் பொறியியலாளர், மனைவி 4 பிள்ளைகள் சடலங்களாக மீட்பு

(திருமலை)

திருமலையில் நேற்றுக்காலை ஆயுதம் தாங்கிய சிங்களக் கோஷ்டியொன்று மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினல் இங்குள்ள தமிழ் பொறியியலாளரும் அவரது மனைவி, பிள்ளைகள் உட்பட மொத்தம் ஆறுபேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

திருமலை நகரிலுள்ள பிரதான வீதியொன்றில் வசித்து வந்த பொறியியலாளர் வீட்டுக்கு வெளியே இழுத்து வரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டாராம்.

இவரது சடலமும், இவரது மனைவியினதும், இரு பிள்ளைகளினது சடலமும் இரத்த வெள்ளத்தில் வீதியில் நேற்றுக் கிடக்கக் காணப்பட்டன.

சிறிது நேரத்தின் பின்னர் மற்றுமிரு பிள்ளைகளின் சடலங்கள் உடைக்கப்பட்டிருந்த அவரது வீட்டிற்குள்ளிருந்து மீட்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. அவரது வீட்டின் மற்றொரு பகுதி எரிக்கப்பட்டும் காணப்பட்டது. இவர்களில் ஒருவர் ஜி. சி. ஈ. உயர் வகுப்பில் கல்வி கற்பவர் எனவும் தெரிகின்றது.

## தமிழ் குழுக்களும் பரிசீலிக்கும்

(சென்னை)

இலங்கை அரசாங்கத்தினல் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்ட புது யோசனைகளின் விளக்கத்தின் பிரதிகளை சென்னையிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கும் வழங்க கூட்டணி முடிவு செய்துள்ளது. இவ்வி

—6ம் பக்கம் பார்க்க

### திருமலையில் இரு கட்டமாக

## 46 மணித்தியாலம் ஊரடங்கு சட்டம்

திருமலையில் நேற்று முன்தினமிரவு ஆரம்பமான சம்பவங்களின் காரணமாக நேற்றுக் காலை ஆறு மணிக்கு இங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இரண்டு கட்டங்களாக மொத்தம் நாற்பத்தாறு மணித்தியாலங்களுக்கு இங்கு அமுல் செய்யப்படும் ஊரடங்குச் சட்டம் நாளை காலை ஆறு மணிக்கு நீக்கப்படுமென நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

—6ஆம் பக்கம் பார்க்க

## ராணுவத்தினர் பூநகரியிலும் வாகன சோதனை ஆரம்பம்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் பூநகரியில் வைத்து இராணுவத்தினரால் வாகனங்கள் யாவும் பலத்த சோதனையிடப்பட்டன. என்றுமில்லாதவாறு பயணிகளின் அடையாள அட்டை, பொருட்கள் யாவும் சோதனையிடப்பட்டன.

கிளிநொச்சி அசம்பாவிதங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் செல்லும் பொதுமக்கள் அதிகமாக பூநகரி ஊடாகவே போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

—6ம் பக்கம் பார்க்க

### மக்கள் விடுதலைப்படை

## போராளிகளுக்கு அஞ்சலி செலுத்த மூன்று கூட்டங்கள்

படகு விபத்தில் மரணமான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படைப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்து முகமாக குடாநாட்டின் மூன்று இடங்களில் இன்றுஅஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது.

காலை ஒன்பதரை மணிக்கு சாவகச்சேரி சந்தை மைதானத்திலும், மாலை நான்கு மணிக்கு சென். ஜேம்ஸ் ஆலய முன்றலிலும், இரவு ஏழு மணிக்கு

—6ஆம் பக்கம் பார்க்க

### யாழ். பல்கலைக்கழக

## முஸ்லிம் மாணவன் கைது! வகுப்புகள் பகிஷ்கரிப்பு!

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ இரண்டாம் வருட மாணவன் ஆதம்வாவா மன்சூர் கடந்த திங்கட்கிழமை அவரது சொந்த இடமான சம்மாந்துறையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு வரும்வழியில் ஆனையிறவு தடைமுகாமில் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரை விடுவிக்கக் கோரி யாழ். பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டது. எனினும், பல்க

—6ஆம் பக்கம் பார்க்க

## 36 யாழ்ப்பாண இளைஞர்கள் தாய்லாந்தில் தத்தளிப்பு!

(வல்வெட்டித்துறை)

பொலிகண்டி, நெல்லியடி, கரவெட்டி, மானிப்பாய், சில்லாலையைச் சேர்ந்த சுமார் முப்பத்தாறு இளைஞர்கள் கொழும்பிலுள்ள வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கூட்டிச் செல்லும் முகவர் பிரதிநிதி ஒருவரால் 'நியூகினி' நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, தாய்லாந்து சென்ற சமயம் கூட்டிச் சென்ற முகவர் போதைவஸ்து வைத்திருந்த

...6ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

பழைய பூங்கா வீதியோரத்தில் அமைந்துள்ள நான்கு பக்கங்கள் சுவர்கள் கட்டப்பட்ட கிணறு உட்பட்ட ஒரு பரப்பும் நாலு குழியையும் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. பி. 1409, C/o. "ஈழமுரசு", 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். B/1409

### பிரத்தியேக கணித வகுப்புகள்

ஆறும் வகுப்பு (ஆண்டு 7) முதல் பத்தாம் வகுப்பு (ஆண்டு 11) வரையுள்ள மாணவர்களுக்கு கணித பாடம் பிரத்தியேக முறையில் வீட்டில் வந்து அனுபவம் மிகுந்த ஆசிரியரினால் சிறந்த முறையிற் கற்பிக்கப்படும். விபரங்களுக்கு: விளம்பர இல. R. 24029, C/o. ஈழமுரசு, 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். B/1407


அஞ்சலிக் கூட்ட உரை:

# தமிழ்நாட்டு ஆதிக்கத்தை மூவருமே எதிர்த்தார்கள்

"எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொதுமக்களின் உணவுத் தேவைகளுடன் அவர்கள் ஈடுபாடு கொண்டுள்ள கலை, கலாச்சாரத்துறைகளையும் வளர்ப்பதற்குப் பாடுபட்டு வருகிறது. அண்மையில் கலாச்சார கூட்டுறவுப் பெருமன்றம் நிறுவப்பட்டுள்ளது. இன்று நடைபெறும் அமரர்கள் பண்டிதமணி, கே. டானியல், சரத் முத்தெட்டுவேகம ஆகிய மூவரும் ஒருவகையில் கூட்டுறவுத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் தான். பண்டிதமணியவர்கள் நிதியை 'நீதி: செய்யவேண்டும் என்பார். எவரும் விளங்கத்தக்க வகையில் இலக்கியங்களையும் இலக்கணத்தையும் போதித்தார். நானும் அவரது மாணுக்கன் தான். கே. டானியல் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகப் போராடினர். சரத் முத்தெட்டுவேகம தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். மூவரும் பல வகைகளில் தமிழ்நாட்டு ஆதிக்கம் இலங்கையில் மேலோங்குவதை எதிர்த்தார்கள்."

இவ்வாறு அமரர்கள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கே. டானியல், சரத் முத்தெட்டுவேகம ஆகிய மூவருக்கும் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத்தின்சார்பிலும் கலாசார கூட்டுறப் பெருமன்றம் சார்பிலும் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை பேசுகையில் கூறினர்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பற்றி சைவப்புலவர் சி. வல்லிபுரம், கருணையோகன் ஆகியோரும், கே. டானியல் பற்றித் திருவாளர்கள் வீ. சின்னத்தம்பி, எஸ். வன்னியகுலம் ஆகியோரும், சரத் முத்தெட்டுவேகம பற்றித் திருவாளர்கள் சி. சிதம்பரநாதன், அ. விஜயநாதன் ஆகியோரும், பொதுவாக மூவரையும் பற்றித் திருவாளர்கள் நெல்லை க. பேரன், க. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

கவிஞர் மன்னவன் மு. கந்தப்பு நன்றி கூறினர்.

## பிறந்தநாள் வாழ்த்து

✻ ஆவரங்கால் சிவன் வீதி, நவரத்தினராசா நகுலாம்பிகை தம்பதியின் மகள் திலீபா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ நுணுவில் மேற்கு, நகுலேஸ்வரன் சாந்தநாயகி தம்பதியின் மகன் சஞ்சீவன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ நாகர்கோவில், குடாரப்பு சோதிசிவம் கோகிலரஞ்சிதம் தம்பதியின் மகன் அச்சுதன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ மிருசுவில், பிரான்சிஸ் பிலோமினு தம்பதியின் மகள் பிரான்சிஸ் கா நிலோ ஜினி இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ உசன், வெற்றிவேல் தயாவதி தம்பதியின் மகள் சுபா இன்று தனது பதின்மூன்ருவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

# குருநகர் மீனவர்களுக்கு இன்று அஞ்சலி நிகழ்ச்சி

(குருநகர்)

மண்டைதீவில் படுகொலையுண்ட குருநகர் மீனவர்கள் முப்பத்தொரு பேர்களது முப்பத்தோராம்நாள் நினைவைக் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் இன்று வியாழக்கிழமை காலை பரி. கொஞ் சேஞ்சிமாதா சேமக்காலைக் கல்லறையில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தல், செபவழிபாடு என்பவற்றுடன் தொடக்கி நடாத்தவுள்ளது.

அன்றையதினம் மாலை குருநகர் கலைஅரங்கில் பஜனை வழிபாடு, மறை மாவட்ட முதல் குரவர் அருட்திரு. மைக்கல் சாமி அடிகளால் நினைவுத்தூபி திரைநீக்கம் செய்துவைத்தல், அஞ்சலிக் கூட்டம் என்பன நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அஞ்சலிக்கூட்டத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர், பேராசிரியர் கா. சிவத்தம்பி, டாக்டர் ஜே. பி சி. பிலிப்ஸ் ஆகியோர் உட்படப் பலர் அஞ்சலி உரையாற்றுவார்கள்.


## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### கலைப் பீடத்திற்குப், நூலகத்திற்கும் உருக்கிலாலானதும், மரத்திலாலானதுமான, தளபாடங்கள் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கும் நூலகத்திற்கும் உருக்கிலாலானதும், மரத்திலாலானதுமான தளபாடங்கள் வழங்குவதற்கு பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அளவுகள், மாதிரிப்படங்கள், அடங்கிய வரைபடங்கள் போன்ற விபரங்களை பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 18.07.1986 ம் திகதி வரை பெற்றுக் கொள்ளமுடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 100/- க்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளை அனுப்பப்பட வேண்டும். கேள்விகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 25.07.86 முற்பகல் 10.00 மணியாகும்.

விண்ணப்பக் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் UJ/F/SK/10/25/07/86 என்ற இலக்கம் குறிக்கப்பட வேண்டும்.

B/1410 பதிவாளர்


## மகா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் பதின்ஞன்காம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. பிரதிஷ்டாகுருவாக சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் கும்பாபிஷேக கிரியா காரியங்களை நிறைவேற்றி வைப்பார்.

## இடமாற்றம்

(சுழிபுரம்)

இதுவரை காலமும் பரந்தனில் இயங்கிவந்த தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பிராந்திய அலுவலகம் இம்மாதம் முதல் யாழ். வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக் காரியாலயத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது.


## காணவில்லை

8.7.86 அன்று பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்னுல் நிறுத்தப் பட்டிருந்த துவிச்சக்கரவண்டி காணுமற்போய்விட்டது இதை கண்டு பிடித்துத் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

துவிச்சக்கரவண்டியின் இனம் Asia Ladies Cable Modal

" இலக்கம். 005 AB 0163

தொடர்பு;

மா. சுந்தரம், (ஆசிரியர்)

இல. 5, பென்ரிக்கோஸ்ரல் லேன்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். R/24030

இடம் பெயர்ந்து அகதிகளான உடன் பிறப்புகட்கு உதவும் கரங்களே!

## வாரி வழங்குங்கள்

சொந்த மண்ணில் அகதியாகும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்ட தமிழ் குடிமக்கள் உணவு, உடை, தங்குமிடமின்றி வாடுவதைக் கண்டு நாம் வாளாவிருப்பதா? நிதி மிகுந்தவர் பொற்குவையும், மற்ருேர் யாவரும் உதவிகளும் கொடுத்து இவர்களை ஆதரிக்க வேண்டாமா?

மனம் நிறைந்தவர்களும் கொடுக்கும் நிலைகொண்டவர்களும் தங்கள் உதவிகளை-அது பணமோ, பொருளோ, உடையோ - உடனடியாக அகதிகட்கு உபகரித்து உதவுங்கள். உங்கள் பலவித உதவிகளையும் ஈழமுரசு இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வு நிதியத்திடம் ஒப்படையுங்கள். தவருமல் பற்றுச் சீட்டும் பெறுங்கள். அவை உரியவர்கட்கு உடனடியாக சேர்ப்பிக்கப்பட்டு, உங்கட்கும் அதன் விபரம் அறிவிக்கப்படும்.

ஈழமுரசு இடம் பெயர்ந்தோர் புனர்வாழ்வு நிலையம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 22437

## J.C.C. தனது புதிய சேவைகளுக்கு உங்களை அன்புடன் அழைக்கின்றது

உரும்பராய் சந்தைக்கு முன்னுல் உள்ள மாடிக் கட்டிடத்தில் சென்ற புதன் (9.7.86) முதல் பின்வரும் சேவைகளை வழங்குகின்றது. காலை 7.45 மணிக்கு விற்பனையை திரு. த. மகாலிங்கம் (மகான்) அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

(I) உங்களிற்கு தேவையான துவிச்சக்கர வண்டிகள், சைக்கிள் உபகரணங்கள் மற்றும் பிளக் வகைகள்.

(II) பரிசளிப்பதற்கும் வீட்டுப் பாவனைக்கும் ஏற்ற எவர்சில்வர் பாத்திரவகைகள், பிளாஸ்ரிக் சாமான்கள், அலுமினியப் பாத்திரங்கள்.

(III) கல்லூரி மாணவிகளுக்கும், நங்கையருக்கும் தேவையான, லேஸ், றிபன், தொப்பி, சட்டைப் பொத்தான்கள், கிளிப், சாந்துப்பொட்டு, குங்குமம் இன்னும் பல பொருட்கள்.

(IV) கல்லூரிக்கு தேவையான அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்கள், பொலிதீன், பிறிஸ்டல் போட் மற்றும் பல அவசியமான பொருட்கள்.

(V) சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாமான்கள்.

(VI) இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்கு தேவையான தகரக் கொட்டகைகள், இரும்புக் கதிரைகள் (வாடகைக்கு)

உங்கள் இனிமையான ஆதரவை பணிவுடன் நாடும்

J. C. C. நிறுவனம்

உரும்பராய் சந்தி,
உரும்பராய். R/24017

# யாழ். மாவட்டக் கிராமங்களை அபிவிருத்தி செய்வது அவசியம்

''யாழ். மாவட்டத்திலுள்ள கிராமங்கள் பலவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அவசியமாகும். வதிரி அபிவிருத்தி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் வதிரி கிராமத்தைச் சேர்ந்தவர்களே இந் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பையும் ஏனைய பொறுப்புகளையும் ஏற்று நடத்த முன்வந்திருத்தல் ஒரு சிறந்த நடவடிக்கையாகவுள்ளது. சிறுவர்களைத் திடகாத்திரமானவர்களாகவும், துணிவுள்ளவர்களாகவும் ஆக்குவதற்கேற்ற சகல நடவடிக்கைகளையும் நிறுவனம் எடுக்க வேண்டும்.''

இவ்வாறு வதிரி அபிவிருத்தி நிறுவன நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட சர்வோதய வெளிக்களப் பணிப்பாளர் திரு கே. கதிரமலை குறிப்பிட்டார்.

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் நிறுவனத்தின் தந்தை திரு. மூ. சி. சினித்தம்பி தலைமையில் இந்த விழா நடைபெற்றது. விழாவில் வைத்தியக் கலாநிதி எம். கே. முருகானந்தம் பேசுகையில் ''நிறுவனம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி வேலைகள் வதிரிக் கிராமத்தில் மட்டுமல்லாமல் அயற்கிராமங்களுக்கும் பரவலாக்கப்பட வேண்டும். ஒரு மனிதனுக்கு கல்வி மிகவும் பிரதானமான தொன்றாகக் கணிக்கப்படும் இவ்வேளையில், மேற்படி நிறுவனம் தமது செலவிலேயே சிறந்ததொரு நூலகத்தை அமைத்து வாசகர்களின் நோக்கத்தைப் பூரணப் படுத்தி வருவதையிட்டு மிகவும் சந்தோசமடைவதோடு, நிறுவன சார்பாக சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து இங்கு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளிக்க வேண்டும்'' என கேட்டுக் கொண்டார்.

மிருக வைத்தியக் கலாநிதி எம். தங்கராசா, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்பிரிவு நிர்வாக அலுவலர் திரு. எம். தம்பிப்பிள்ளை, தேவரையாளி இந்துக்கல்லூரி உப அதிபர் திரு. சீ. திரவியம், பனை அபிவிருத்திச்சபை சந்தைப்படுத்தும் அலுவலர் திரு கே. வீ. திவ்வியராசா, அரசகரும மொழித்திணைக்கள அத்தியட்சகர் திரு. வி. சிவராசசிங்கம் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

---

குருநகர்

## தொடர் மாடி சீர் பெறுகிறது

(குருநகர்)

குருநகர், தொடர் மாடி மனைகள் பொதுமக்கள் குடியிருப்புக்கு வழங்கப்பட்டு ஒரு வருடத்தைக் கடந்துவிட்ட போதும் இராணுவ முகாமாக பயன்படுத்தியதால் ஏற்பட்ட இடிபாடுகள், நீர் - மின்விநியோகச் சீரமைப்புகள் இதுவரை செய்து கொடுக்கப்படாமலே இருந்துவந்தது.

பல தடவைகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டக்கிளையுடன் தொடர்மாடி விழிப்புக்குழு அபிவிருத்திச் சங்கம் மூலமாக பிரதிநிதிகள் தொடர்பு கொண்டு வேண்டுகோள் விடுக்கப்பட்டும் பல்வேறு காரணங்களால் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படாமல் பின்போடப்பட்டு வந்தது.

ஒரு மாதத்திற்கு முன்பாகத் தொடர்மாடி வாசிகள் யாழ். செயலகத்திற்குச் சென்று மறியல் செய்து அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவர்களை நேரில் கண்டு நிலைமையை எடுத்து விளக்கியதன் பயனாகத் தொடர்மாடி வீடுகளின் திருத்த வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் இதுவரை குடிநீர், மின்சாரம் போன்ற உபகரணங்களால் பாதிக்கப்பட்டுவந்த தொடர் மாடி வாசிகளின் தேவைகள் பூர்த்தி ஆக்கப்பட்டு விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

யாழ்ப்பாண மாணவருக்கு

# மடங்களில் வகுப்புகள் நடாத்தும்நிலை வந்துள்ளது

(கல்வியங்காடு)

''இன்றைய நிலையில் எமது மாணவர்கள் பலர் கொட்டில்களிலும், குடிசைகளிலும், மரங்களிலும் தமது கல்வியைப் பயில வேண்டியுள்ளார்கள். அண்மையில் வடமராட்சிப் பகுதிக்கு நான் சென்றபோது வல்வெட்டித்துறையில் மடம் ஒன்றில் ஒரு பாடசாலையின் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நேரில் பார்த்தேன். இது போன்று பல பாடசாலைகள் எத்தனையோ கஷ்டமான சூழ்நிலையில் இன்று மாணவர்களுக்கு எமதுபகுதியில் கல்வி போதனை செய்து கொண்டிருக்கின்றன. என்னதான் இன்னல்கள், இடைஞ்சல்கள் எமது மாணவர்களுக்கு ஏற்பட்டாலும் அவர்கள் உறுதியான மனத்திடத்துடன் தமது கல்வியைத் தொடரவேண்டும்.''

இவ்வாறு நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய கல்விப் பொருட் கண் காட்சியைத் திறந்து வைத்துப்பேசிய யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார். வித்தியாலய அதிபர் திருமதி சொ. சிவச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பெற்றோர் பொதுமக்கள் ஆகியோர் நிறைந்த அளவில் கலந்து கொண்டார்கள்.

கல்விப்பணிப்பாளர்தொடர்ந்து உரையாற்றுகையில், ''செய்கைத் திறன் மாணவர்களிடையே புரிந்து கொள்ளும் தன்மையை வளர்க்கின்றன. நான் கேட்பதை மறந்து விடுகிறேன்; பார்ப்பதை நினைவில் வைத்திருக்கிறேன்; செய்வதைப் புரிந்து கொள்கிறேன்; என்னும் வாக்கியங்கள் இப்பாடசாலையின் கண்காட்சியின் ஒரு பகுதியில் எழுதப்பட்டிருந்தமை என்னைக் கவர்ந்தது. மாணவர்களின் அறிவுத் திறமையை இக் கண்காட்சியில் கண்டு மகிழ்கிறேன்'' என்றார்.

'செய்தியில் கல்வி' என்ற தலைப்பில் புத்தக உருவில் பத்திரிகையில் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பற்றி வந்த செய்திகளின் தொகுப்பு ஒன்றும் கல்விப் பொருட்காட்சியில் காணப்பட்டது. இவை ''ஈழமுரசு'' வில் வெளிவந்த செய்திகளாக இருந்தன.

இவ்விழாவில் கலந்து கொண்ட சகலருக்கும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர், திரு. பொ. தனபாலசிங்கம் நன்றி கூறினார்.

---

# மக்கள் தேவை பூர்த்தியாக ஒற்றுமை மிகப் பிரதானம்

(சரசாலை)

''மக்கள் நோயின் கொடுமையின்றி வாழ வைத்திய நிலையத்தை நாடவேண்டியுள்ளது. இன்று தமிழ் மக்கள் சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். ஆட்சியாளர்களின் புறக்கணிப்பால் தமிழ் இனம் தமது அடிப்படைத் தேவைகளான வைத்தியம், கல்வி முதலானவற்றை பெறமுடியாத நிலையில் உள்ளது. எனவே மக்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டு தமது தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இப்பகுதி மக்களின் தேவைகளை இந்த வைத்திய நிலையம் நிறைவுசெய்யும் என எதிர்பார்க்கலாம், இவ்விடத்தில் இது ஆரம்பிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்''

இவ்வாறு சாவகச்சேரிமடத்தடியில் வைத்தியநிலையம் ஒன்றினைத் திறந்து வைத்து உரையாற்றிய முன்னாள் கிராமாட்சி மன்றத் தலைவரும் இளைப்பாறிய ஆசிரியருமான திரு. அ. ஆறுமுகம் குறிப்பிட்டார்.

சமாதான உறுப்பினர் திரு. எஸ். விநாசித்தம்பி, வித்வான் எஸ். கந்தையா, ஆசிரியர் சு. முருகேசு, கு. வி. மகாலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்தினர். டாக்டர் திருமதி கௌரி திருலோகமூர்த்தி நன்றி நவின்றார்.

---

நயினை. இறங்குதுறை சிரமதானம்

# மக்களுக்கு இராணுவம் குளிர்பான உபசரிப்பு

நயினாதீவு விகாரைக்கு முன்பாக உள்ள இறங்குதுறை சிரமதானமூலம் துரிதமாகச் செப்பனிடப்படுகின்றது.

இங்கு முகாமிட்டுள்ள ஆயுதப்படையினரே இவ் வேலையைச் செய்கின்றபோதிலும் ஊர் மக்களும் வேலையில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டதால் அவர்களும் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சிரமதானப் பணியில் ஈடுபடுவோருக்கு ஆயுதப்படையினர் குளிர்பானம், சிகரெட் முதலியன வழங்குகின்றனர்.

இவ் வேலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் முன்பு பாதுகாப்புப் படையினரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட நயினாதீவு வடக்குக் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலிருந்தும் எடுக்கப்படுகின்றனவாம்.

இந்த இறங்குதுறை வேலைகள் பூர்த்தியானபின் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலடி இறங்குதுறை வழி மூடப்படலாம் எனப் பேசப்படுகின்றது.

---

# சின்னஞ்சிறு செய்திகள்

## முன்மாதிரி நடவடிக்கை

(சங்கானை)

வட்டுக்கோட்டை - மேற்கு பிரிவில் சமாதான சபையின் விசாரணைகளுக்கு சிலர் சமுகம் அளித்து சாட்சியம் வழங்க மறுத்தமையை சபையினர், உதவி அரசாங்க அதிபரின் கவனத்துக்கு தெரிவித்தமையால் கிராம சேவை அலுவலர் திரு. க. சிறிகரன் நடவடிக்கை மேற்கொண்டார்.

உரிய எதிர்மனுதாரர்களுடன் அவர் நேரில் சென்று சமாதான சபைகளின் அதிகாரங்களையும், இன்றைய நிலையில் நீதிமன்றத்துக்குச் சென்று விசாரணைகளை துரிதப்படுத்தி நடைமுறைகளை கவனிப்பதன் கஷ்டங்களையும், விபரித்தார். இதன் விளைவாக பலர் ஒழுங்காக வேறு கட்டுப்பாடுகள், உத்தரவுகள், எச்சரிக்கைகள் எதுவும் இன்றி சமுகம் அளித்து சாட்சியம் அளித்து வருகின்றனர்.

உண்மை நிலைகளை உரிய அலுவலர்கள் மூலம் உரிய முறையில் கட்டளைகளை வழங்கி முதல் இரண்டு தடவைகள் சந்தர்ப்பங்கள் வழங்கி நடவடிக்கைகளை சமாதான முறையில் சர்வாதிகார போக்கு இல்லாத முறையில் நடைமுறைப் படுத்தி வருவது மிகவும் சிறப்பான, பண்பான, பணியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பற்றைக்குள் ஒரு கை

(சுன்னாகம்)

பற்றையொன்றினுக்குள்கிடந்த மனித கைஒன்றினால் வசாவிளான் பகுதியில் பெரும் பரபரப்பேற்பட்டுள்ளது. வசாவிளான் முகாமுக்கருகாமையில் பற்றைக்குள் இருந்த முழு அளவிலான கையை ஆட்டிற்கு உணவு தேடிச் சென்ற பி. செல்லையா என்பவர் நேற்றுமுன் தினம் கண்டபோது அதனை நாய்கள் கடித்து இழுத்துச் சென்றதாகத் தெரிவித்துள்ளார். இராணுவ நடவடிக்கை காரணமாக மரணமான ஒருவரின் கையாக இது இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## கண்காட்சி

(சுன்னாகம்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சி 11ம் திகதி வெள்ளி பிற்பகல் 12-00 மணியிலிருந்து 4-00 மணிவரை நடைபெறவிருக்கின்றது இக் கண்காட்சியை கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா திறந்து வைப்பார்.

## வானொலி நேயர் நலனுக்காக...

(மானிப்பாய்)

வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி நிகழ்ச்சிகளை தெற்கு, தென்கிழக்காசிய மக்கள் தெளிவாகக் கேட்பதற்கு வசதியாக தற்போதுள்ள 50 கிலோ வாற்ஸ் ஒலிபரப்பு சாதனங்களுக்கு பதிலாக 250 கிலோ வாற்ஸ் ஒலிபரப்பு சாதனங்கள் பொருத்தப்படவுள்ளன. இச் சாதனங்கள் வெரித்தாஸின் தமிழ்ப்பணிக்கு அன்பளிப்பாக கிடைக்கவுள்ளன. இது வெரித்தாஸின் தமிழ்ப் பணியின் இலங்கை, இந்திய நேயர்களுக்கு ஓர் இனிக்கும் செய்தியாகும்.

## கண்காட்சி ஏற்பாட்டுக்கு பாராட்டு

(கரவெட்டி)

''இன்று அனைத்துப் பாடசாலைகளிலும் கல்விக் கண்காட்சி நடைபெற்று வந்த போதிலும் இந்த விக்னேஸ்வராக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி மாணவர்களுக்கும், நாட்டுமக்களுக் பயனுள்ளதாகவும் அமைந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய ஒரு கண்காட்சியை திறமையாக நடத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கட்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.''

இவ்வாறு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில்நடைபெற்ற கல்விக் கண்காட்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. சந்திரராசா பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''ஒரு காலத்தில் தரங் குன்றியிருந்த இக் கல்லூரி இன்று அதிபரின் முயற்சியாலும். மாணவர்களின் ஒத்துழைப்பினாலும் சிறந்தலடைவது குறிப்பிடத்தக்கதொன்றாகும்'' என்றார்.

## விளையாட்டு போட்டிகள்

யாழ் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டம், மென் பந்து, கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளையும் கரம், டாம் போட்டிகளையும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் அதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 15-ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர் கல்விபாதிப்பு

(நெடுந்தீவு)

''நெடுந்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் தமது கல்வியிற்பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். ஆசிரியர் பற்றுக்குறை நிவர்த்தி செய்யப்படுதல் வேண்டும். பண்ணைப் பாதை தடைப்பட்டதால் வெளியூர் ஆசிரியர்கள் தமது கடமைக்கு வராமற் தொடர்ந்தும் இருப்பதால் உயர்வகுப்பு மாணவர்களின்பிரதான பாடங்களான, கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி ஆகியன கற்பிக்கப்படாமல் கடந்த பல வாரங்களாக மாணவர்கள் பாடசாலையில் வீணே பொழுதைக் கழிக்கின்றனர். உடனடியாக இவற்றை நிவர்த்தி செய்ய கல்வி நிர்வாகம் ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும்''

இவ்வாறு நெடுந்தீவு மகா வித்தியாலய அபிவிருத்திச் சபையின்வருடாந்தப் பொதுக் கூட்டத்தின்போது தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மிகவும் குறைந்த ஆசிரியர்களே கடமைக்கு வந்துள்ளமையால் பெற்றோர் தமது மாணவரின் கல்வி பாதிப்படைந்துள்ளமை குறித்துக் கவலை தெரிவித்தனர்.

புதிய நிர்வாகிகள் தெரியப்பட்டு பலவகையிலும் மகா வித்தியாலய அபிவிருத்திக்குப் பெற்றோர் ஒத்துழைப்பு நல்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**உதய சிந்தனை**

நமக்குள் இருக்கும் பலவித பிளவுகளாலேயே நமது அடிமைத்தனம் பலப்பட்டு வருகிறது.

— இரவீந்திரநாத் தாகூர்.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதய ஒளி

10-7-86 வியாழக்கிழமை (அக்ஷய) ஆனி 26

# நிறைவேற்று அதிகாரம் யாருக்கு வழங்கப்படும்?

இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள மாகாண சபைகள் பல்வேறு தரப்பட்ட கருத்துக்கள், ஆலோசனைகள் இப்போது அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தென்னிலங்கைக் கட்சிகள் வேறு கோணத்தில் இவைகளைப் பார்வையிடும் அதேவேளையில், தமிழர் கட்சிகளும் அமைப்புக்களும் இதனை மிக ஆழமானதாகப் பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

''இப்போதைக்கு பிரச்சினை தீர்ந்தால் போதும்; மிகுதியைப் பிறகு பார்ப்போம்!'' என்பது தென்னிலங்கையாளர்களின் நிலை.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இந்த யோசனைகளால் நிறைவேற்ற முடியுமா என்பது தமிழ்ப்பகுதியாளர்களின் நிலை.

விடுதலை இயக்கப் போராளிகள் குழுக்கள் இந்த யோசனைகளை முற்றுமுழுதாக நிராகரித்து விட்டன.

திம்பு மாநாட்டில் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த கோரிக்கைகளைக் கூட இந்த யோசனைகள் நிறைவேற்ற வில்லை என்பது அவர்கள் கூறும் காரணம்.

ஆனாலும் இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணங்கச் செய்யவேண்டுமென்பதில் சில இடதுசாரிச் சிங்களக் கட்சிகள் இன்னமும் தீவிரமாகவுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சென்னைக்கும் புதுடில்லிக்குமிடையே ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

பார்த்தசாரதி, சிவ்சங்கர் ஆகியோருடன் பேசுவதும், தமது அரசியல் பீடத்தைக் கூட்டி ஆராய்வதுமாக கூட்டணி வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

15ம திகதிய அரசியல் கட்சிகள் மகாநாட்டில் கூட்டணி பங்குபற்ற மாட்டாதாயினும், அதற்கு முன்னர் கொழும்பு வந்து ஜனாதிபதியைச் சந்தித்து சில முக்கியமான விளக்கங்களைப் பெறலாமென்பது ஊர்ஜிதமாகி வருகின்றது.

இரு பகுதியினருக்குமிடையே பிரச்சினைக்குரியதாகவிருக்கும் ஒரு விடயம் மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரம் (EXECUTIVE POWER) யாரிடம் இருக்க வேண்டும் என்பது தான்.

இலங்கை அரசியலமைப்பின்படி தற்போது நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டவர் ஜனாதிபதி.

இந்திய அரசியலமைப்பின்படி சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டவர் பிரதம மந்திரி.

இலங்கையில் பிரதம மந்திரியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. நிறைவேற்று அதிகாரங்கள் அவருககு இல்லை.

அதே போல, இந்திய ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. அவர் வெறும் ''றபர் ஸ்டாம்ப்'' மட்டுமே.

இதனால் இந்திய மாநிலங்களில் கவர்னர்களுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் இல்லை. மாநில முதலமைச்சர்களே நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ளார்கள்.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதி தாமே கொண்டிருப்பதால், தம்மால் நியமிக்கப்படவுள்ள மாகாண கவர்னர்களுக்கு நிறைவேற்று அதிகாரங்களை வழங்க விரும்புகின்றார்.

அப்படியானால் மக்களால் தெரிவுசெய்யப்படும் மாகாண முதலமைச்சர், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் கவர்னரின் கைப்பொம்மையாக கதிரையில் இருக்கவேண்டும்.

இதுவேதான் இப்போது இலங்கை இந்திய அரசுகளுக்கிடையே விளக்கங்களையும், விபரங்களையும் கோர இடமளித்துள்ளது.

பாரத அமைச்சர் சிதம்பரத்திடம் வழங்கிய நகல் திட்டத்தில் மாகாண முதலமைச்சருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப்படுமென்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பித்த திட்டத்தில் கவர்னருக்கே நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்கலின் முதலாவது அம்சத்திலேயே இப்போது முன்னுக்குப்பின் முரணான திருகு தாளங்கள் இடம் பெற்றுள்ளன.

அங்கொன்றும், இங்கொன்றுமாக இரு திட்டங்களை வைத்துக்கொண்டு, இதில் எதனைத்தான் ஜனாதிபதி செயற்படுத்த முனைகின்றாரோ?

பாராளுமன்ற நகல் மசோதா தயாரிக்கப்பட்ட பின்னர்தான் இதன் உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியுமென நினைக்கின்றோம்.

# இலங்கையின் உளவாளியாக கந்தசாமி எவ்வாறு மாறினார்?

'இலங்கை அரசாங்கத்தினால் ஏவிவிடப்பட்ட இரகசிய உளவாளிகள் சென்னை மாநகரிலமைந்த இலங்கைத் தமிழர் நிறுவனங்களுள் ஊடுருவப் பார்ப்பார்கள். எம்மில் ஒருவர் போல, ஆளோடு ஆளாக, தமிழர் விடுதலைக்கு விசுவாசமாகப் பாடுபட்டு உழைப்போர் போல, இம்மியளவும் தாம் துரோகிகள் எனச் சந்தேகிக்க இடமின்றி திறமையாக நடிப்பர். நடித்து, எம்மைப்பற்றியும், எமது இயக்கங்களைப் பற்றியும், அவற்றின் செயற்பாடுகள் குறித்தும், இயக்க வலிமைகள், பெலவீனங்களையிட்டும் வேவுத் தகவல் சேகரித்து அத்தகவல்களை விரைந்து, 'நசுக்கிடாமல்', ஜெயவர்த்தனவின் இலங்கை அரசிற்கு அறியத் தருவார்கள். இப்படியாக அறியத்தர உத்தரவாதமான, பாதுகாப்பான, அந்தரங்க மார்க்கங்கள் முன்கூட்டியே ஏற்பாடாகியிருக்கும்.

கொழும்பில் பயிற்றப்பட்ட இந்த ஒற்றர்கள், அகதிகளாகிய தமிழரின் வெளித்தோற்றத்துடன். இலங்கை அரசாங்கத்தினால் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். இவர்களையிட்டு நாம் சதா கண்விழிப்பாக இருப்போம். தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் இத்தகைய துரோகிகளின் ஊடுருவ ஒண்ணாதவண்ணம் வலிமையும் திறமையும் ஓங்க சிறந்த கட்டுக்கோப்புடன் அமைதல் அத்தியாவசியம் ஆகும்.' இது, பரத கண்டத்துச் சென்னை நகரில் நிலை கொண்டுள்ள இலங்கைத் தமிழர் அமைப்புகளின் சிந்தனையும் சாவதானமும் நெடுங்காலமாகச் செல்லும் போக்கின் பிரதிபலிப்பு. ஊடுருவ வொண்ணாது, திறம்பட இயங்க, இவ்வமைபபுகள் போதிய கவனஞ் செலுத்தின.

ஆனால், உளவுபார்த்தனர் எனும் குற்றச்சாட்டின்பேரில், 1986, ஜூன் மாதம் சென்னையில் ஐவர் கைதானமை, அங்குள்ள இலங்கைத் தமிழர் அமைப்புகளுக்கு ஓர் அதிர்ச்சியாக அமைந்தது. இரண்டு இந்தியர்கள், மூன்று இங்கையர் ஆகிய இந்த ஐந்து ஆட்களில் குறித்த ஒருவர்மீது தமிழ் ஈழ விடுதலைப் போராளி இயக்கங்கள் திடநம்பிக்கை வைத்திருந்தன. வியப்பு வசப்பட்ட இலங்கைத் தமிழர் தலைவர் ஒருவர்: 'இலங்கை அரசாங்கத்தின் ஓர் ஒற்றராக அவர் இருந்திருக்கக்கூடும் என என்னால் நம்பவே முடியவில்லை.' என்றார்.

நாற்பத்திரண்டு வயதினரான கந்தசாமி நாயுடு என்பவரே இங்கு குறிப்பிடப்பட்ட இலங்கை அரசு சார்பில் உளவறியச் சென்னைக்கு வந்திருந்தவராவர். இலங்கையின் அமைச்சர் ஒருவரது முன்னைநாட் பந்தோபஸ்து அதிகாரியாகிய அவர், இலங்கைத் தீவு அடங்கிலும் 1983, ஜூலை ஆகஸ்ட்டில் தமிழ் மககளுக்கு எதிராக வெடித்தெழுந்த வன்முறைகளை உடனடுத்து ஆயிரக்கணக்கான பிற இலங்கைத் தமிழர்களோடு சென்னைக்குத் தப்பியோடிச்சென்றிருந்தார். கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர், எஸ். தொண்டமானின் மெய்ப்பாதுகாவலராக இவர் பணியாற்றினார்.

சென்னைவாழ் மக்களின் கண்களுக்கு, தமிழ் மக்களின் விடுதலைக்கென ஆதரவாக, தம்மை முழுமையும்அர்ப்பணித்திருந்த ஒருவராகவே அவர் தென்பட்டார். 1983ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரைப் பொறுத்த அளவில் நிலவிய நெருக்கடியின் நடு மத்தியில், தலைவர் அ. அமிர்தலிங்கம் ஆபத்தின்றி இந்தியா செல்ல உதவியவர் கந்தசாமி நாயுடு அல்லவா? எதனைத்தான் மறந்தாலும், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் இப்பயங்கர நாட்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், அங்கிருந்து தென்னிந்திய மாநிலமாகிய தமிழ் நாட்டிலுள்ள சென்னைக்கும் இரண்டாம் பேரறியாது பாதுகாப்பாகச் செல்லமுடிந்த பயணத்தை ஒழுங்கமைத்து உதவிய பூரண நம்பிக்கைக்கு உரியவர் கந்தசாமி நாயுடு அன்றோ?

'அகதி' கந்தசாமி நாயுடு 'வயிற்றுப் பிள்ளையையும் வழுகி விழவைக்கும்' அழுத்தமான நாவன்மை படைத்தவர். முன்னர் தொண்டமானுடன் அவர் கொண்டிருந்த பழைய உறவுகள் அவருக்கு உருப்படியான உறுதுணையாக இப்போது நின்றுதவின. எனவே, பல்வேறு தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களோடு நட்புப் பாராட்டலும், அம்முனைப்பில் வெற்றி காணுதலும், அவருக்கு இலகுவாயின. இயக்கங்களுமோ இவருடன் ஏற்பட்ட இவ்வுறவினால் தமக்கு நலம் வாய்க்கும் எனக் காண்பனவாயின.

இந்நிலையில் கந்தசாமி நாயுடுமீது சந்தேகக்கண்வீசிய இந்திய மாநிலமாகிய தமிழ் நாட்டுப் பொலிசார் அவரைத் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தி, துருவித் துருவி விசாரணை தொடுத்தனர். தான் புரிந்த பல தப்புகளை அவர் ஒப்புக்கொண்டார். அவற்றுட் சில திடுக்கிட வைப்பன; வேறு சில, நம்பவொண்ணு விகாரமானவையுங்கூட 1986 ஆம் ஆண்டு முற்பகுதியில் சென்னை வதியும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் ஏ. பாலசிங்கத்தின் வீட்டுக்கு வெடிகுண்டு வைத்து அவ்வீட்டு முகட்டைத் தகர்த்தவர் தானேஎனக் கந்தசாமி நாயுடு ஒப்புக்கொண்டார். ஆயினும் குண்டு வெடிப்பினால் எவரும் இறக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பாலசிங்கத்தை 'ஒழித்துக் கட்டும்' பணிப்புரையைத் தான் நிறைவேற்றிய அதே சமயம், சக தமிழர் ஒருவரைக் கொல்லத் தனது மனம் இடம்தர விலையாதலால், அக்குண்டு எவரையும் கொல்லாதிருத்தலைத் தான் உறுதிப்படுத்திக் கொண்டதாகத் தற்போது நாயுடு கூறினார். இலங்கை அரசின் வேவுபார்க்கும் ஒழுங்கமைப்பினது உயர் வட்டாரங்களுடன் கந்தசாமி நாயுடு தொடர்புகள் பேணி வந்தார் என, புலன் விசாரணைகளின் வாயிலாக அறியப்பட்டுள்ளது.

கந்தசாமி நாயுடுவுக்கு இலங்கை வேவுபார்த்தல் ஒழுங்கமைப்பின் உயர் வட்டாரங்களுடன் இணைப்புகள் உண்டு என்பது நிரூபணமாகியுள்ளது. விடுதலைப்புலிகள் தலைவர், பாலசிங்கத்தைக் கொன்று விடுமாறு தமக்கு அறிவுறுத்துரை வழங்கிய எஜமானர்கள் தமக்கென நிர்ணயித்து ஒதுக்கபட்டிருந்த இலககைத் தாம் எய்தத் தவறியமை குறித்து மகிழ்ச்சி இழந்திருந்தனர் என்றார் நாயுடு. அது தெளிவாகத் தெரிந்தது எனவும் அவர் கூறினார்.

இலங்கை அரசு சார்பான, அதே வேளை தமிழர் விடுதலை இயக்கங்களுக்குத் துரோகமான தமது நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புலனாகாதிருத்தற்காக, தாம் ஒரு பிரசார பாத்திரம் மேற்கொண்டார் எனவும் கந்தசாமி நாயுடு எடுத்து விளக்கினார் இதுவும் அவரது ஒற்றர் அமைப்பு எஜமானரால் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த ஒரு பணியே என்றாரவர்.

ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனவின் மகன் ரவிஜெயவர்த்தனவுக்குத் தமிழர் விடுதலைப் போராளிகளினது இயக்கங்களின் ஆதரவைத் திரட்டுதற்கு கந்தசாமி நாயுடு தமது செல்வாக்கைப் பிரயோசிக்கவேண்டியுமிருந்தது. இலங்கையின் ஜனாதிபதிப் பதவியின் மீது, ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அடுத்தமைபவராக வருவதில் லலித் அதுலத்முதலி 'ஒரு கண்' வைத்திருக்கிறார். இவர் தற்போது தேசிய பந்தோபஸ்து அமைச்சராக விளங்குகிறார் இவருடைய ஆர்வத்தை விலக்கும் ஒரு முயற்சியாகவே ரவியின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள சில வட்டாரங்கள் இவருடைய அவாவுக்குத் தடையிடும் பிரயத்தனத்தில் இப்படியாக இறங்கியுள்ளன. ஆக, அதுலத்முதலியைவிட, தமிழருடைய கோரிக்கைகளை வழங்குவதில் ரவி ஜெயவர்த்தன 'கூடிய நாட்டம்' கொண்டவராக இருப்பார் என்ற எண்ணத்தை போராளிகள் மனதில் விதைத்து விடுமாறு கந்தசாமி நாயுடு பணிக்கப்பட்டு இருந்தார்.

இப்பாடுகளுக்காக, பல்வேறு மார்க்கங்கள் ஊடாக, மாதமொன்றுக்கு மூவாயிரம் முதல் நாலாயிரம் ரூபாவரை கந்தசாமி நாயுடுவுக்கு இறுக்கப்பட்டது. இந்தப் 'பொன்னுசை' தான் அவருடைய விசுவாசத்தை இலங்கை அரசின் பால் ஈர்த்தது என இந்தியப் பொலிசுப் புலன் விசாரணையாளர்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளனர். உள்ளதைச் சொல்வதானால், மூன்று ஆண்டுகளுக்கு முன், 1983, ஆகஸ்ட் மாதமளவில் அவர் இந்திய மண்மீது அடியெடுத்து வைத்தபோது இலங்கையில் தமிழருடைய விடுதலை இயக்கங்களுக்கு உறுதியான ஆதரவாளர் ஒருவராகவே அவர் தோன்றினார்.

இந்திய மண்மீது கந்தசாமி நாயுடு கைது செய்யப்பட்டார். அதனையடுத்து 'பாப மன்னிப்புக் கோரும்' பாவனையில் அவர் தாம் புரிந்த செயல்களை ஒப்புக்கொண்டுள்ளார். இலங்கை அரசு இவற்றால் ஓர் இக்கட்டான முகம் கொடுக்கச் சங்கடமான, ஒரு நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் என்பது திண்ணம். சென்னையில் நேர்ந்த குண்டு வெடிப்புகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபாடானது அவ்வரசின் செயற்பாட்டிற்கு இன்னுமொரு புதிய பரிமாணத்தை மேலதிகமாகச் சேர்த்துள்ளது. இந்திய மண்மீது இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் போராளிகளோடு போர்தொடுக்க முற்பட்டுள்ளமைக்கும் அக் குண்டுவெடிப்பு

...5 ஆம் பக்கம் பார்க்க

★ 'புரன்ட்லைன்' சஞ்சிகையின் ஜூன் 28 ஜூலை 11ம் திகதிய இதழில் வெளியான சிறப்புக் கட்டுரையின் தமிழாக்கம் இது

'நியூஸ்டைம்ஸ்' சஞ்சிகையில்
'அருண் சாக்கோ' எழுதிய
கட்டுரையின் இறுதிப்பகுதி

## இலங்கை ஹெலிகப்டருக்கு அமெரிக்க விமான ஓட்டிகள்

அடுத்து, அமெரிக்க இராணுவ உதவியைச் சற்று நோக்குவோம். பீரங்கியமைந்த பெல் 212 ஹெலிக்கொப்டர்களை அமெரிக்க விமானிகள் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இலங்கையில் செலுத்திவருகின்றனர். அண்மையல் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சிலரை ஹெலிக்கொப்டர் ஒன்றில் ஓர் அமெரிக்க விமானி கொழும்பிலிருந்து திருக்கோணமலைக்குச் செலுத்திச் சென்றார். இராணுவ ஹெலிக்கொப்டர்களை அமெரிக்க விமானிகள் இலங்கையில் செலுத்துவது உண்மைதான் என்பதை இத்தீவின் கிழக்கு மாகாண உயர்தர இராணுவ அதிகாரியொருவராகிய பிரிகேடியர் ஹர்ஷா குணரத்ன, அத் திருக்கோணமலை விஜயத்தையடுத்து ஒப்புக் கொண்டார் அவை ஒருபுறமிருக்க, அமெரிக்காவின் ('ஸெவின்ந்த் ஃபிளீற்') ஏழாவது கடற்படைக் 'கொமான்டர்'கள் இலங்கை ஜனாதிபதியைச் சென்று கண்டுள்ளார்கள். மேலும், இலங்கைத் தீவின்கண் அமெரிக்க, பிரித்தானிய வேவுத் தகவல் அதிகாரிகளின் சந்திப்பு நிகழ்ந்துமுள்ளது. இவை அனைத்தையும் கணிப்பிற் கொள்ளாது விடும்பட்சத்தில், இலங்கையின் தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகளில், அமெரிக்கர்களின் பங்கு சிறியதாகவே காண்பிக்கப்படுகிறது எனத் தோன்றும். ஓர் அரசியல் தீர்வைத்தான் தாங்கள் ஆதரிப்பதாகவும், இந்தியாவை அந்நியப்படுத்தத் தாம் விரும்பவில்லை எனவும் அமெரிக்கர்கள் கூறிக் கொள்கின்றனர்.

தென்னாபிரிக்கத் தொடர்பு ஒன்றுமுண்டு. படைக்கலங்கள் சில கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இருந்தாலும் தென்னாபிரிக்க ஆளணிகள் பற்றிய அறிக்கைகள் எவையேனும் இல்லை. 'நேரடியாகத் தென்னாபிரிக்காவிடமிருந்து நாம் ஆயுதங்கள் எவற்றையேனும் கொள்வனவு செய்யவில்லை. தென்னாபிரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டொரு ஊர்திகளை மாதிரிக்காக நாம் சர்வதேச ஆயுதச் சந்தையில் நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். எவ்வாறாயினும் தென்னாபிரிக்க அரசினது அதிகாரத்தின் கீழுள்ள எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் நாம் அவற்றைக் கொள்வனவு செய்யவில்லை. இவை நிலக்கண்ணி வெடி- எதிர்ப்பு வாகனங்களாகும். இவ்வாறு இலங்கையின் பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி என்னிடம் தெரிவித்தார்.

அத்துலத் முதலி மேலும் தொடர்ந்து சொல்கையில், "அரசுக்கும் அரசுக்கும் இடையிலான இணைப்புக்கள் எவற்றையேனும் இலங்கை தென்னாபிரிக்காவுடன் கொண்டிருக்கவில்லை. உலக தேயிலைச் சந்தை விநோத தன்மையுடையது. தேயிலை அக்கறைகளினின்றும் நெருக்குதல்கள் பிறக்கின்றன. இவற்றை முன்னிட்டு, பாரம்பரியமாக, எவ்வித இடையீடுமின்றி, தென்னாபிரிக்காவுடன் கொழும்பு தனியார் துறை வணிகம் நடத்தி வந்துள்ளது. முன்னைய அரசாங்கங்களின்கீழும் இது நடைபெற்றுவந்துள்ளது" என விபரமாக விளக்கினார். பொதுவாக இப்படியாக இருக்கிறது, இலங்கை- தென்னாபிரிக்கா உறவு.

'இலங்கை அரசாங்கநிலைமை இங்ஙனமாயினும், தமிழர்விடுதலைப் போராளிகளான இளைஞர்கள் வெளியேயிருந்து உதவி பெற்று வருகின்றார்கள். அவர்கள் ஆதரவுபெறும் எண்ணற்ற எத்தனையோ பிரதேசங்களை நாம் அறிவோம். எடுத்துக்காட்டாக 'ரெலோ' இயக்கத்தைப் பற்றிய ஒரு மணியை நாமறிவோம். மூன்னைநாள் இந்திய இராணுவ அதிகாரியாகிய அவர் பெயர் நரசிம்மன். அவர்களைப் பயிற்றியதோடு அமையாது அண்மையிற் கொல்லப்பட்ட 'ரெலோ' தமிழர் போராளி இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் ஞாபகார்த்த வைபவத்திலும் கூட (இது சென்னையில் நடந்தேறியது) சமூகமளித்திருந்தார். இந்திய மாநிலமாகிய தமிழ்நாட்டுதமிழ்ப் பத்திரிகைகள் கூட அதனை வெளியிட்டிருந்தன. இன்னும்எண்ணிலாத எத்தனையோ பேரை எங்களுக்குத் தெரியும்.' இவ்வாறு குறிப்பாகவும், பொதுப்படவும், கூறிமுடித்தார். இலங்கை பந்தோபஸ்து அமைச்சர், லலித் அத்துலத்முதலி.

(முற்றும்)

### மெய்வல்லுநர் போட்டி

(சங்கானை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பல வருடங்களின் பின்னர் அதிபர் திரு. இ. கருணாநிதி தலைமையில் கண்ணகி அம்மன் ஆலய வீதியில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஒலிம்பிக் தீபமேற்றல் நிகழ்ச்சி தொடக்கம் கயிறிழுத்தல் வரை மிகவும் உற்சாகத்துடன் மாணவர்கள் பங்குபற்றியமையும் பலரது கவனத்தையும் ஈர்த்தது.

பாடசாலைக்கு அண்மையில் மைதான வசதி இல்லாமையால் மேலும் உரிய விளையாட்டு பயிற்சிகள் அளிக்க முடியவில்லை என விளையாட்டுச் செயற்குழுவினர் கவலை தெரிவிக்கின்றார்கள். கல்வி இலாகா அதிகாரிகள் மேற்படி குறையை கவனத்தில் எடுத்து உதவ முன்வர வேண்டுப் என்று கோரப்படுகிறது.

### இலங்கையின்...

ஒரு முதற் சான்று ஆகும். சென்னையிலமைந்த பாலசிங்கம் வீட்டுக் குண்டுவெடிப்புக்கும் இலங்கை அரசின் 'ஏஜென்ற்' களுக்கும் ஏதும் தொடர்பு இருந்தமைக்கான சான்று எதுவும் இந்தியப் பொலிஸ் புலன் விசாரணையாளரிடம் இதுவரை கிடைத்திருக்கவில்லை- அதாவது, கந்தசாமி நாயுடு அதைப்பற்றித் தகவல் வெளியிடும்வரை.

இலங்கையில், ஓர் அரசியல் தலைவரின் பந்தோபஸ்து அதிகாரியாகக் கந்தசாமி நாயுடு ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டு முதல் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றும் ஆண்டுவரை உத்தியோகபூர்வமாகப் பதவிவகித்தார் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமானே அவர். அத்தலைவர் இச் சம்பவங்களையிட்டு என்ன சொல்கிறார்? எடுத்த எடுப்பிலேயே, கொழும்பில் வைத்து. கந்தசாமி நாயுடுவுடன் நான் சம்பந்தப்பட்டு இருந்தேன் என்பது சுத்த அபத்தம்.' எனத் தம்மை தொண்டமான் இந்த இவரிடமிருந்து அந்நியப்படுத்திக் கொள்கிறார். (முடிவு)

அமைச்சர் தொண்டமான் வலியுறுத்துகிறார்
இலங்கை இனப்பிரச்சினை சமரசப் பேச்சு வெற்றி பெற

# இலங்கையில் மீண்டும் ஒரு யுத்த நிறுத்தம் அவசியம்

(திருச்சி)

**இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் இவ்வேளையில் தமிழ்ப் போராளிகளும், இலங்கை அரசும் ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக அமுல் செய்ய வேண்டும் என கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இங்கு தெரிவித்தார்.**

செய்தியாளரிடம் பேசிய அமைச்சர், யுத்த நிறுத்த உடன்பாடு மீண்டும் ,க்க பூர்வமான முறையில் செயற்படுத்தினல் இலங்கை அரசின் புதிய யோசனைகளின் அடிப்படையில் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க நல்ல சூழ்நிலை உருவாகும் என்றார்.

இவ்விடயத்தில் இந்திய அரசு அதிக முயற்சிகளை எடுக்கும் என தாம் நம்புவதாகவும் திரு. தொண்டமான் கூறினார்.

இலங்கை அரசின் பிரதிநிதிகளும், தமிழ்ப் போராளிகள், மற்றும் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளும் கொண்ட ஒரு சமரசக் குழு மத்திய அரசின் ஆலோசனையுடன் அமைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்திய வம்சாவழி தமிழரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு குடியுரிமையற்ற மிகுதி தமிழர்களுக்கு குடியுரிமை பெற்றுத்தரவும் தமது கட்சி ஆவலுடன் இருப்பதாகவும் சொன்னார்.

### ஆய்வில் வெற்றி

(வாஷிங்டன்)

நிலத்திலிருந்து ஏவப்படும் றொக்கெட் மூலம் விண்ணில் ஏவுகணைகளைத் தடுத்து நிறுத்தும் ஆய்வில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளது.

பங்களாதேஷ் பாராளுமன்றத்தை

## பகிஷ்கரிக்கப் போவதாக எதிரணியினர் மிரட்டல்

(டாக்கா)

பங்களாதேஷின் நான்குவருடகால இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவராவிட்டால் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்றக் கூட்டத்தொடரைத் தாம் பகிஷ்கரிக்கப்போவதாக எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன.

மே மாதம் நடைபெற்ற தேர்தலில் 206 ஸ்தானங்கள் ஜாதிககட்சிக்குக் கிடைத்தன. இதில் முப்பது பெண்களும் உள்ளனர்

மொத்தம் 330 ஸ்தானங்கள் பங்களாதேஷில் உள்ளன.

### அன்பளிப்பு

(புலோலி)

ஆத்தியடியில் இயங்கிவரும் பருத்தித்துறை அரசினர் தருமவைத்தியசாலைக்கு ஆத்தியடி பொது மக்கள் மின் அடுப்பு, பிளாஸ்டர், பன்டேஜ் போன்ற பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இவ் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களின் நன்மை கருதியே இப்பொருட்கள் வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரி முன் மண்வெட்டியுடன் சென்ற

## யாழ். இளைஞர் சவூதியால் திருப்பி அனுப்பப்பட்டார்

(றியாட்)

கம்பனி அதிகாரியை அவமதிக்கும் வகையில் அவர் முன்பாக மண்வெட்டியுடன்சென்ற யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் தனதுவேலையை இழந்துவிட்டதுடன் இலங்கை திரும்பவேண்டிய அவல நிலைக்கும் உள்ளானார்.

சவூதியின் தலைநகரான றியாட்டில் உள்ள கம்பனி ஒன்றில் பணியாற்றிய வடபகுதித் தமிழ்இளைஞர் ஒருவரே தனது வேலையைப் பறிகொடுத்துவிட்டு இலங்கை திரும்பியவராவார்.

றியாட்டில், முரசலாத் என்னும் இடத்தில் இருக்கும் தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றிவந்த பிரஸ்தாப இளைஞர் அங்கே மேற்பார்வையில் ஈடுபட்டிருந்த கம்பனி அதிகாரியின் அழைப்பிற்கு மதிப்புக் கொடுக்காது அவர் முன்பாக மண்வெட்டியுடன் அவரை அவமதிக்கும்வகையில் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது

வேலையை இழந்து இலங்கை திரும்பியிருக்கும் இந்த இளைஞர் கடந்த நான்கு வருடகாலம் சவூதியில் கடமையாற்றிவந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### கி. அ. சங்க கூட்டம்

(சங்கானை)

வட்டுக்கோட்டை— கிழக்கு-தாவளை கிராம அபிவிருத்திச் சங்க விசேட பொதுக் கூட்டம் உப-தலைவர் செல்வி கலைமகள் சிவசுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

புதிய தலைவராக சட்டத்தரணி திரு. சோமசுந்தரம் தெரிவானார் பொதுச் செயலாளராகத் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை காரியதரிசி திரு. என். சிவசுப்பிரமணியம் தெரிவானார்.

மேற்படிச் சங்க கட்டடமின் இணைப்பு வேலைக்கு பதினையாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், விவசாயிகளுக்கு ஐக்கிய நாணய சங்கம் 'விவசாய கடன்' வழங்கும் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த நடைவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### விநாயகர் உற்சவம்

உடுவில் கிழக்கு அருள்மிகு கற்பக விநாயகராலய வருடாந்த மஹோற்சவம் நாளை 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 22 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியாகும். 20 ஆம் திகதி காலை இரதோற்சவமும் 21ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

### வருடாந்த விளையாட்டு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இம்மாதம் 12ம்திகதி சனிககிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விஜய குமாரணதுங்க அறிவிப்பு:

## இலங்கையில் அமைதி ஏற்படுவதையே தமிழரும் சிங்களவரும் விரும்புகிறார்கள்

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க அங்கே நல்ல அரசியல் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக சிங்கள மக்கள் கட்சி செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிங்களவரும் தமிழரும் அமைதியான சூழ்நிலை ஏற்படுவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக சொன்ன திரு. விஜய பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு நல்ல முடிவு ஏற்பட உதவுமாறு தமிழ் போராளிகள் குழுவை கேட்டுக் கொள்ளவே தாம் மீண்டும் இங்கு வந்துள்ளதாக கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களையும் அவர் சந்தித்து பேசுவதுடன் நாளை வெள்ளிக் கிழமை புதுடில்லி சென்று மத்திய அரசு அதிகாரிகளுடனும் பேசுவார்.

### காலமானார்

இந்திய பெற்றோலிய இணை அமைச்சர் திரு. சந்திரசேகர் சிங் நேற்று காலை காலமானார். கல்லீரல் புற்றுநோய் காரணமாக இவர் மரணமானார்.

ஈழமுரசு
THE EELAMURASU

## கிழக்கு மாகாண எம். பீக்களுக்கு ஜனாதிபதி யோசனைகளை விளக்கினார்

(கொழும்பு)

ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்றுக்காலை கிழக்கு மாகாண எம். பீக்களைத் தனிமையில் சந்தித்து இனப்பிரச்சினைக்கான புதிய யோசனைகள் பற்றி விளக்கம் அளித்தார். சுமார் இரண்டு மணித்தியாலத்துக்கு மேலாக இச்சந்திப்பு பாராளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாணசபை எல்லைகள், திருமலைக்கு தனியான ஆணைக் குழு நியமித்தல், மாகாண முதல் அமைச்சர், கவர்னர் ஆகியோருக்கான அதிகாரங்கள், குடியேற்றத்திட்ட விதிமுறைகள் உட்பட்ட பல்வேறு விடயங்கள் பற்றியும் ஜனாதிபதி எம். பீக்களுக்கு விளக்கிக் கூறினார். சில சிரேஷ்ட அமைச்சர்களும் இச்சந்திப்பில் பங்கு பற்றினர். இக்கூட்டத்துக்கு முன்னர் அமைச்சரவைக் கூட்டத்திலும் ஜனாதிபதி புதிய யோசனைகள் பற்றி மேலதிக விளக்கங்கள் தெரிவித்தார்.

### 25ம் திகதி வெள்ளிக்கிழமை

# இனப்படுகொலை எதிர்ப்பு நாள்!

இம்மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமையை இனப்படுகொலைக்கு எதிரான தினமாக "தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்துக்கான இணைப்புக்குழு" பிரகடனம் செய்துள்ளது.

"தமிழ் மக்களுக்கு எதிராக அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற இனப்படுகொலைகள் உச்சக் கட்டத்தை அடைந்துவருகின்றன. இதற்கு எதிராக ஒவ்வொரு தமிழ் பேசும் பிரஜைகள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் தேவை என்று மேற்படி குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்காக இனப்படுகொலைக்கு எதிரான தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இம்மாதம் 25ம் திகதி சகலரும் தமது அலுவல்களைப் பகிஷ்கரித்து, பொது இடங்களில்கூடி, கண்டனப்பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டுமெனவும் இணைப்புக் குழு கேட்டுள்ளது.

"மக்கள் போராட்டத்தில் சகலரும் பங்குபற்றவேண்டும்" எனவும் இங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## திறந்த பல்கலைக்கழகத்தின் பயிற்சி நெறி விண்ணப்பம்

பாடசாலை முன்னிலைக் கல்விச் சான்றிதழிற்கும், ஆள்வினைமைச் சான்றிதழிற்கும் இட்டுச் செல்கின்ற பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கு 1986 ஜூலை 1-ம் திகதியிலிருந்து விண்ணப்பங்கள் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் உள்ள திறந்த பல்கலைக்கழக பிரதேச அலுவலகங்களில் வழங்கப்படும்.

நேரில் செல்பவர்களுக்கு இம்மாதம், 25ஆம் திகதி வரை பிராந்திய நிலையங்களில் தகவலையும விண்ணப்பப் படிவங்களையும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நுகேகொடைத் தபாலகத்தில் செலுத்தத் தக்கதாக, இலங்கைத் திறந்த பல்கலைக் கழகப் பதிவாளரின் பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

### 46 மணித்தியாலம்...

நேற்றுக்காலை ஆறு மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் முதற்கட்டம் இன்று காலை எட்டு மணிக்கு முடிவடையும்.

காலை எட்டு மணிமுதல்பத்து மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்காது.

மீண்டும் காலை பத்து மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்கு நாளை காலை ஆறு மணி வரை அமுலில் இருக்கும்.

### ராணுவத்தினர்...

கடந்த சில நாட்களாக ஆனையிறவில் வைத்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்கள் திருப்பிவிடப்பட்டமையும் பூநகரி ஊடாக மக்கள் அதிகமாக பயணம் செய்யக்காரணமாக விருந்தது.

மேற்படி சோதனைப்பிரச்சினைகளால் இப்பாதைவழியாக பயணம் செய்வதும் சிரமமான காரியமாகியுள்ளது.

### போராளிகளுக்கு...

கோப்பாய் பிள்ளையார் கோவிலடியிலும் அஞ்சலிக் கூட்டங்கள் பொது மககளால் ஒழுங்கு செய்யப்படடுள்ளது.

போராளிகளின் மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாக இன்று மாலை மூன்று மணியுடன் கடைகளைப் பூட்டி, வாகனப் போக்குவரத்துகளை நிறுத்தி, கறுப்புக் கொடிகளை பறக்க விடுமாறு ஈ.பி.ஆர்.எல்.எஃப் வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே.

எனினும் நேற்றைய தினமே குடாநாட்டின் பல பகுதிகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு தோரணங்களும் கட்டப்பட்டன.

### தமிழ் குழுக்களும்...

ளக்கத்தை கூட்டணி அரசியல் குழு நேற்று பரிசிலனை செய்தது.

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம்பிள்ளை மீனாட்சி

(பச்சைமுத்து)

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த திருமதி சுந்தரம்பிள்ளை மீனாட்சி காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும், நாகரத்தினம் (கயானு), நாகபூரணி, துரைராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசா, ஞானலோசனி, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியுமாவர்.

அன்னாரின் ஈமச் சடங்கு (10-7-86) இன்று பி. ப. 2 மணியளவில் "சிவனகம்" சாவகச்சேரி இல்லத்தில் நடைபெறும்.

நா. சிவராசா,
சத்தியா ஏஜென்சீஸ்,
சாவகச்சேரி.

R/24033

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேயற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 10-07-86 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437

## ஜூலை மாத பென்ஷன் பணம் கொடுப்பனவுத் திகதிகள்

தபாற்கந்தோர் மூலமாக வழங்கப்படும் ஜூலை மாதத்துக்குரிய பென்சன் கொடுப்பனவுகள் இம் மாதம் 22ம் திகதி செவ்வாய் முதல் துரையப்பா ஸ்ரேடியத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

22ம் திகதி செவ்வாய்; கொக்குவில், மானிப்பாய், வேலணை, வண்ணார்பண்ணை.

23ம் திகதி புதன்: வல்வெட்டித்துறை, தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை. வசாவிளான்.

24ம் திகதி வியாழன்: யாழ்ப்பாணம், கைதடி.

25ம் திகதி வெள்ளி: கரவெட்டி, காங்கேசன்துறை, அளவெட்டி, சுன்னாகம்.

28ம் திகதி திங்கள்: நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, சுழிபுரம்.

29ம் திகதி செவ்வாய்: கோப்பாய், காரைநகர், பருத்தித்துறை, கொடிகாமம்.

30ம் திகதி புதன்: யாழ்ப்பாணம், அச்சுவேலி, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை.

31ம் திகதி வியாழன்: சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, உரும்பராய், சங்கானை.

### அரியாலை தெ. ப. கூ. ச. அலுவலகம்முன்

## ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்க அலுவலகம் முன்பாக நேற்றுக்காலை அடையாள மறியல் போராட்டம் நடைபெற்றது. இது சம்பந்தமாகச் சங்க நிருவாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், ஊழியர்கள் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டிருந்தனர்.

"சங்க முகாமையாளரின் தவறான முறைப்பாட்டின் படி, குறிப்பிட்ட விழிபுக்குழு 6-7-86ல் கூடவிருந்த நிர்வாக சபைக் கூட்டத்தைக் கூட்டவிடாது தடுத்ததுடன், சங்கப் பொதுச் செயலாளரையும் அடித்துப் பல்லுடைப்போம் எனப் பயமுறுத்தி அவமதித்துள்ளனர். முகாமையாளர் சங்கத்துடன் சம்பந்தமில்லாத விழிப்புக்குழுவிடம் சென்ற நடைமுறையைக் கண்டித்தும் அத்துமீறிப் பயமுறுத்தி பலாத்காரம் பாவித்த விழிப்புக்குழுவைக் கண்டித்தும் அடையாள மறியல் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளோம்" என இங்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப் போராட்டத்தில் சங்க நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், ஊழியர்கள், பொதுமக்கள், சங்க நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

## மாலை நேர துப்பாக்கிச் சூடு

(வண்ணார்பண்ணை)

யாழ். கோட்டையிலுள்ள இராணுவத்தினர் கோட்டையைச் சுற்றிவரவுள்ள சில குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி நேற்று மாலை துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். குண்டு வெடிப்புச் சத்தங்களும் நகரில் நேற்றுக் கேட்டது. எனினும் சேதமெதுவும் ஏற்படவில்லை.

### முஸ்லிம்...

லைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோர் இது தொடர்பாக எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதுவும் எவ்வித முன்னேற்றத்தையும் அளிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து மேற்படி மாணவன் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பலகலைக் கழகத்தில் நேற்று பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் விடுத்துள்ள அறிக்கையில, முஸ்லிம் மந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் தலைவர்கள் இவ்விடயத்துடன் தொடர்புபடுவதோடு இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும நடைபெறாது மாணவர்களுக்குப் பாதுகாப்பை வழங்ககூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளார்கள்.

## வேல் விழா 19-ல் ஆரம்பம்

கொழும்பில் இடம்பெறும் வருடாநத வேல் விழா இம்மாதம் 19-ம் திகதி நடைபெறும் வெள்ளிரத பவனியுடன் ஆரம்பமாகும். 20-ம் திகதி தங்கரத பவனி பம்பலப்பிட்டி கோவில் வரை நடைபெறும்.

### 36 யாழ்ப்பாண

குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அவருடன் சென்ற தமிழ் இளைஞர்கள் மேற்கொண்டு செல்லும் வகை தெரியாது தத்தளித்து நின்றபோது தாய்லாந்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினர் இவர்களைக் கள்ளமாகத் தாய்லாந்தில் புகுந்ததாகக் குற்றஞ்சாட்டி சிறையில் வைத்துள்ளனர்.

மூன்று மாதங்களாகியும் இதுவரை அவர்கள் விடுதலை செய்யப்படவிலலை. கொழும்பு முகவரை விசாரித்தவிடத்து, இது விஷயமாக முகவர் பிரதிநிதி ஒருவர் தாய்லாந்து சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் தலா நாற்பதாயிரம் ரூபா முகவருக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

## ஆசிரியர் சங்க அவசர கூட்டம்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அவசர செயற்குழு கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கத்தின் யாழ். பணிமனையில் நடைபெறவுள்ளது. இச்சங்கம் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக தொடர்ந்தும் கணிக்குமாறு கல்வியமைச்சர் உத்தரவிட்டிருப்பதை தொடர்ந்து இது பற்றி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எவ்வாறு விஸ்தரிக்கலாம் என்பது பற்றி ஆராயவும் இக்கூட்டம் அவசரமாக கூட்டப்படுகிறது என சங்க பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## பலியானோர் குடும்பங்கட்கு நிதியுதவி

(புலோலி)

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட மோட்டார் ஷெல் தாக்கியதனால் பலியான இருவரின் குடும்பங்களுக்கு மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் நிதிஉதவி வழங்கியுள்ளது.

கடந்த 30ம் திகதி பருத்தித்துறையில் நடைபெற்ற இராணுவ மோட்டார் ஷெல் தாக்குதல்களின் போது கொலையுண்ட தம்பசெட்டியைச் சேர்ந்த திரு. சங்கரப்பிள்ளை சிவக்கொழுந்து, செல்வி தமிழ்ச்செல்வி, பேரம்பலம் ஆகிய இருவரின் குடும்பங்களுககும் சனசமூக நிலையம் தலா 500 ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது.

## நீரின்றி விவசாயிகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

நீர் விநியோகம் சீராக இல்லாததால் கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிவருகின்றனர். முன்னர் இரணைமடுக் குளத்தில் இருபத்திரண்டு அடி உயரத்தில் நீர் இருந்தபோதுகூட சிறுபோகத்தில் விவசாயிகள் சிரமமின்றி நீர்ப்பாய்ச்சக் கூடியதாகவிருந்தது. தற்போது சுமார் முப்பது அடி நீர் இருந்தும் விவசாயிகள் வயல்களுக்கு நீர்ப்பாய்ச்ச பிரச்சினைப்பட வேண்டியுள்ளது. நீர் விநியோகம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இது குறித்து போதிய கவனமெடுக்காமையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.